**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**
**DINDIGUL.**
**S.C. 150/2024**
**Prosecution Witness : 5**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திரு. சதானந்தம்** | **Caste** | : | |
| **Father's Name** | : | **திரு. மருதை** | **Calling** | : | **சிறப்பு சார்பு ஆய்வாளர் (ஓய்வு)** |
| **Village** | : | | **Religion** | : | **இந்து** |
| **District** | : | **திண்டுக்கல்** | **Age** | : | **64** |
| | | | **Dated** | : | **12.03.2026** |

**இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது**

---

**2 மற்றும் 4 எதிரிகள் ஆஜர். 3-ம் ஆஜரில்லை, பிரிவு 355 BNSS-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. 1-ம் எதிரி**

அ.சா. 5 (பட்டியல் சாட்சி 2), **திரு. சதானந்தம்** ஆஜர். சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**<u>முதல் விசாரணை :-</u>**

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து வருகிறேன். நான் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்றுவிட்டேன். 18.06.2016 ம் தேதி அதிகாலை 03.00 மணியளவில் நானும், சார்பு ஆய்வாளர் திரு. ரபிக், மு.நி.கா. 384 திரு. பிரபாகரன் ஆகியோருடன் நகர் ரோந்து சென்றிருந்தபோது, குடைப்பாறைப்பட்டி முருகன் கோவில் அருகே நான்கு பேர் நின்று பேசிக்கொண்டு இருந்தார்கள். பின்னர் பெயர், விலாசம் கேட்டுத் தெரிந்து கொண்ட 1. குமரேசன், த/பெ. மருது சேர்வை, 2. ராஜா என்ற கப்பர் ராஜா, 3. சக்திவேல், 4. மணி, 5. அருள் குணசேவியர்

ஆகியோர் எங்களை பார்த்தவுடன் ஓட முற்பட்டபோது, குமரேசன் மற்றும் கப்பர் ராஜாவைப் பிடித்து விசாரித்தபோது, முன்னுக்குப்பின் முரணாக பதில் சொன்னதால் 03.30 மணிக்கு அவர்களைக் கைது செய்து, 04.00 மணிக்கு நிலையம் கொண்டு வந்து, குற்ற எண். 463/2016, பிரிவுகள் 41(2) Cr.P.C. வழக்கு பதிவு செய்து, எதிரி குமரேசனை தனியாக சாட்சிகள் மாயாண்டி மற்றும் உதயக்குமார் முன்னிலையில் விசாரித்தபோது ஒப்புதல் வாக்குமூலம் யார் தூண்டுதல் இன்றியும், அச்சுறுத்தல் இன்றியும் தாமாக முன்வந்து அளித்தார். பெரிய வீடாக கொள்ளையடித்து வெளியே போய் செட்டிலாக வேண்டும் என திட்டம் தீட்டியதாகவும், அதற்கு பயன்படுத்துவதற்காக ஆயுதங்களை ஒளித்து வைத்துள்ளதாகவும் சொன்னார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் மேற்படி குற்ற எண்ணில் சட்ட மாறுதல் அறிக்கையை சார்பு ஆய்வாளர் செய்து, மேல் விசாரணைக்காக ஆய்வாளர் பார்வைக்கு வைத்தார். பின்பு 06.30 மணிக்கு சாட்சிகள் மற்றும் எதிரிகளுடன் குடைப்பாறைப்பட்டி சம்பவ இடத்திற்கு சென்று, பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார். பின்னர் எதிரிகளுடனும், கைப்பற்றப்பட்ட வழக்குச் சொத்துக்களுடனும் நிலையம் வந்தார். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:-</u>

அன்றாட பணிகளை மேற்கொள்வது சம்மந்தமாக குறிப்பதற்கு என்னிடம் ஒரு பாக்கெட் நோட்புக் இருக்கும் என்றால், சரிதான். அதில் காலை ரோந்து போனது, எதிரிகளைக் கைது செய்தது, சான்று பொருட்களை கைப்பற்றியது சம்மந்தமாக குறிப்புகள் இருக்கும் என்றால் சரிதான். இந்த வழக்கில் மேற்படி நோட்புக்கை நான் விசாரணை

அதிகாரியிடம் ஒப்படைத்தேனா என்றால், நானும் ஒப்படைக்கவில்லை, அவர்களும் கேட்கவில்லை. ரோந்து பணிக்காக சென்ற பகுதி முறைக்காவல் பணிக்காக பகுதி என்றால், அன்று திரு. ரபிக், சார்பு ஆயவாளர் முறைக்காவலில் இருந்தார். மேற்படி முறைக்காவல் பணி எத்தனை மணி நேரம் இருக்கும் என்று கேட்டால், இரவு 08.00 மணி முதல் காலை 08.00 மணி வரை இருக்கும். நாங்கள் ரோந்து சென்ற பகுதி குடியிருப்புகள் நிறைந்த பகுதி என்றால், சரிதான். என் முன்பாக எந்த எதிரியிடமும் இருந்து ஒப்புதல் வாக்குமூலம் வாங்கவில்லை என்றால் சரிதான், நான் பணி முடிந்து வீட்டிற்கு போய்விட்டேன். என் முன்பாக எந்தவித வழக்குச் சொத்துக்களும் கைப்பற்றவில்லை என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொன்னது போல் சொன்ன தேதியில், சொன்ன நேரத்தில் ரோந்து பணி எதுவும் செய்யவில்லை என்றாலும், எந்த எதிரியையும் கைது செய்யவில்லை என்றாலும் சரியல்ல. புள்ளி விபர கணக்கிற்காக மட்டுமே எதிரிகள் மீது இந்த வழக்கு பொய்யாக பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனது மேல் அதிகாரியின் வேண்டுகோளுக்கு இணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

Taken down by me/before me in open court on 12.03.2026 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.

V DEEPA
Digitally signed by V DEEPA
Date: 2026.03.12 17:20:14 +0530

Chief Judicial Magistrate,
Dindigul.